## இலட்சியம் மற்றும் இலட்சணத்தை சமமாக்குங்கள், அனைத்து பொக்கிஷங்களில் நிறைந்தவர் ஆகுங்கள்

இன்று அனைத்து பொக்கிஷங்களின் எஜமானன் தன்னுடைய பொக்கிஷங்களில் நிறைந்திருக் கும் குழந்தை களைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் அனைத்து பொக்கிஷங்களினால் நிறைந்து இருக்கின்றார்கள். யார் நிறைந்து இருக்கின்றார் களோ, அவர் களுடைய அடையாளம் யாதெனில், அவர்கள் சதா பிராப்தி சொரூபமாக, திருப்தியான ஆத்மாவாகத் தென்படுவார்கள். சதா மகிழ்ச்சியாகத் தென்படுவார்கள், ஏனென்றால், நிறைந்து இருக்கின்றார்கள். ஆகவே, தன்னிடம் எத்தனை பொக்கிஷங்கள் சேமிப்பாகி உள்ளன? என்று ஒவ்வொருவரும் தன்னிடம் கேளுங்கள். இந்த அழிவற்ற பொக்கிஷங்கள் இப்பொழுதும் கிடைத்துள்ளன, மேலும், எதிர்காலத்தில் அனேக பிறவி களுக்குக் கூடவே இருக்கும். இந்த பொக்கிஷங்கள் அழிந்து போகக் கூடியவை அல்ல. அனைத்தையும் விட முதலாவதான பொக்கிஷம் - ஞானம் என்ற பொக்கிஷம், இந்த ஞானம் என்ற பொக்கிஷத்தினால் இந்த சமயம் கூட நீங்கள் அனைவரும் முக்தி மற்றும் ஜீவன் முக்தியை அனுபவம் செய்து கொண்டிருக் கின்றீர்கள். வாழ்ந்து கொண்டிருக்கும் போதும், பழைய உலகத்தில் இருக்கும் போதும், தமோகுண வாயுமண்டலத்தில் இருச்கும் போதும், ஞானம் என்ற பொக்கிஷத்தின் ஆதாரத் தினால், இவ்விதமான அனைத்து வாயு மண்டலம், அதிர்வலைகளில் இருந்து விடுபட்டு முக்தி அடைந்திருக்கின்றீர்கள், தாமரை மலருக்கு சமமாக விடுபட்ட முக்தி அடைந்த ஆத்மாக்களாக, துக்கத்திலிருந்து, கவலை களில் இருந்து, அசாந்தியில் இருந்து விடுபட்டு இருக்கின்றீர்கள். வாழ்ந்து கொண்டி ருக்கும்போதே தீயவைகளின் பந்தனங்களில் இருந்து விடுபட்டு இருக்கின்றீர்கள். வீணான எண்ணங்களின் புயலில் இருந்து விடுபட்டு இருக்கின்றீர்கள். விடு பட்டு இருக்கின்றீர்களா? அனைவரும் கை அசைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

முக்தி மற்றும் ஜீவன்முக்தியே இந்த ஞானம் என்ற பொக்கிஷத்தின் பலன், பிராப்தி ஆகும். வீணான எண்ணங்கள் வருவதற்கு முயற்சிக்கின்றன, எதிர்மறையானவையும் வருகின்றன. ஆனால், வீணான எண்ணம் அல்லது எதிர்மறையானவற்றின் வேலையோ வருவது மற்றும் ஞான சொரூப ஆத்மாக்களாகிய உங்களுடைய வேலையோ, அவற்றில் இருந்து முக்தி அடைவது, விடுபட்டவராக மற்றும் தந்தைக்கு அன்பானவராக இருப்பது என்ற இந்த ஞானம் அதாவது புரிதல் உள்ளது. எனவே, ஞானம் என்ற பொக்கிஷம் கிடைத்துள்ளதா? நிறைந்து உள்ளதா? சம்பன்னமாக உள்ளதா அல்லது குறைவாக உள்ளதா? என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை குறைவாக உள்ளதென்றால், அதை சேமித் திடுங்கள், காலியாக இருக்கக்கூடாது.

இதுபோலவே யோகம் என்ற பொக்கிஷம் - இதன் மூலம் அனைத்து சக்திகள் கிடைக்கின்றன. யோகம் என்ற பொக்கிஷத்தின் மூலம் அனைத்து சக்திகளும்

சேமிப்பாகி உள்ளனவா? என்று தன்னை பாருங்கள். அனைத்தும் உள்ளனவா? ஒரு சக்தியேனும் ஒருவேளை குறைவாக இருந்தாலும், தக்க சமயத்தில் ஏமாற்றத்தைக் கொடுத்துவிடும். உங்கள் அனைவருடைய பட்டம் - மாஸ்டர் சர்வசக்திவான், சக்திவான் அல்ல, சர்வசக்திவான் என்பதாகும். சர்வ சக்திகள் என்ற பொக்கிஷம் யோக பலத்தின் மூலம் சேமிப்பாகி உள்ளதா? நிறைந்துள்ளதா, பிராப்தி சொரூபமாக இருக்கின்றீர்களா அல்லது பற்றாக்குறை உள்ளதா? ஏன்? இப்பொழுது தன்னுடைய குறையை நிறைத்துக்கொள்ள (நிவர்த்தி செய்ய) முடியும். இப்பொழுது வாய்ப்பு உள்ளது. பிறகு, நிறைத்துக் கொள்வதற்கான சமயம் முடிவடைந்துவிட்டால், பற்றாக் குறையாகவே இருந்துவிடும். சோதனை செய்யுங்கள் - ஒவ்வொரு சக்தியையும் முன்னால் கொண்டு வாருங்கள், மேலும், முழு நாளின் தினச்சரியத்தில் சோதனை செய்யுங்கள் - ஒருவேளை, சதவிகிதத்தில் குறை உள்ளது என்றால் முழுமையாகத் தேர்ச்சி பெற்றவர்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில், உங்கள் அனைவருடைய இலட்சியம் என்னவென்றால் - நீங்கள் முழு தேர்ச்சி பெற வேண்டுமா அல்லது பாதி தேர்ச்சி பெற வேண்டுமா என்று எந்தக் குழந்தையிடம் கேட்டாலும், நான் சூரியவம்சத்தைச் சேர்ந்தவர் ஆகுவேன், சந்திர வம்சத்தைச் சேர்ந்தவர் ஆகமாட்டேன் என்று அனைவரும் கூறுகின்றார்கள். பாப்தாதா மிக நல்ல சிம்மாசனம் கொடுப்பார்கள், சந்திரவம்சத்தைச் சேர்ந்தவராக ஆகுவீர்களா? இந்தியர்கள் சூரிய வம்சத்தினர் ஆகுவார்கள், வெளி நாட்டினர் சந்திரவம்சத்தினர் ஆகுவார்கள் என்றால் ஆகுவீர் களா? ஆகமாட்டீர்களா? சூரியவம்சத்தைச் சேர்ந்தவராக ஆக வேண்டுமா? ஆகியே தீர வேண்டும். இன்றோ பாப்தாதா உரையாடல் செய்து கொண்டிருக்கின்றார்கள். சூரிய வம்சத்தைச் சேர்ந்தவராக ஆகியே தீரவேண்டும், உறுதியான நம்பிக்கை உள்ளது, தந்தையிடம் மற்றும் தனக்குத் தானேயும் உறுதிமொழி செய்துவிட்டீர்கள் என்றால் இப்பொழுதிலிருந்தே எந்தவொரு சக்தியினுடைய சதவிகிதமும் குறைவாக இருக்கக்கூடாது. ஒருவேளை, சூழ்நிலையின் அனுசாரம், பிரச்சனைகளின் அனுசாரம் சதவிகிதம் குறைவாகிவிட்டது என்றால், 14 கலை உடையவர்கள் ஆகிவிடுவார்கள். ஆகையினால், தற்காலம் பாப்தாதா நாலாபுறங் களிலும் உள்ள அனைத்து குழந்தைகளுடைய கணக்குவழக்கு, பதிவேட்டை சோதனை செய்து கொண்டிருக் கின்றார்கள். பாப்தாதாவிடமும் ஒவ்வொருவருடைய பதிவேடு உள்ளது. ஏனெனில், இப்பொழுது சமயத்தினுடைய வேகத்தின் அனுசாரம், எப்பொழுதாவது என்று கூறாதீர்கள், இப்பொழுது என்று கூறுங்கள் என்பதை சமயத்தின் அனுசாரம் முன்னதாகவே பாப்தாதா குழந்தைகளுக்குக் கூறிக்கொண்டு இருக்கின்றார்கள். எப்பொழுதாவது நடந்துவிடும், செய்துவிடுவேன் . . ., நடந்து தானே ஆகவேண்டும் . . . இவ்வாறு யோசிக்காதீர்கள். அது தானாக நடக்காது, இப்பொழுதே செய்ய வேண்டும். சமயத் தின் வேகம் தீவிரம் ஆகிக்கொண்டு இருக்கின்றது. ஆகையினால், தந்தைக்கு சமம் ஆகுவதற் கான, முழுமையாகத் தேர்ச்சி பெறு வதற்கான, 16 கலை சம்பன்னம் ஆகுவதற்கான இலட்சியம் வைத்திருக்கின்றீர்கள். இலட்சியம் மற்றும் இலட்சணம் நடைமுறையில் சமமாக ஆகவேண்டும் என்பதையே பாப்தாதாவும் விரும்புகின்றார்கள். எப்பொழுது இலட்சியம் மற்றும் இலட்சணம் ஆகிய இரண்டும் சமமாக இருக்குமோ, அப்பொழுதே தந்தைக்கு சமமான வராக சகஜமாக ஆகுவீர்கள். எனவே, சோதனை செய்யுங்கள் - நடந்துவிடும், ஆகிவிடுவேன் . . . இது கவனக்குறைவு ஆகும். என்ன செய்ய

வேண்டுமோ, என்ன ஆகவேண்டுமோ, என்ன இலட்சியம் உள்ளதோ, அதை இப்பொழுதே செய்ய வேண்டும், ஆகவேண்டும். எப்பொழுதாவது என்ற வார்த்தையை சொல்லாதீர்கள், இப்பொழுதே என்று சொல்லுங்கள்.

ஞானம் என்ற பொக்கிஷம், யோகம் என்ற பொக்கிஷம், இன்னும் தாரணைகள் என்ற பொக்கிஷமும் உள்ளது. இதன் மூலம் (தாரணைகள் மூலம்) குணங்கள் என்ற பொக்கிஷம் சேமிப்பு ஆகின்றன. எவ்வாறு சர்வ சக்திகள் உள்ளனவோ, அதுபோலவே குணங்களில் கூட சர்வ குணங்கள் உள்ளன, வெறும் குணம் அல்ல, சர்வ குணங்கள். எனவே, சர்வ குணங்கள் உள்ளனவா? அல்லது ஓரிரு குணங்கள் குறைந்தால் என்ன, பரவாயில்லை என்று யோசிக் கின்றீர்களா? பரவாயில்லை என்பது கூடாது. எனவே, சர்வ குணங்கள் என்ற பொக்கிஷம் சேமிப்பாகி உள்ளதா? எந்த குணத்தின் பற்றாக்குறை உள்ளது என்பதை சோதனை செய்து, அதில் நிறைந்துவிடுங்கள்.

நான்காவது விசயம் - சேவை. சேவை மூலம் அனைவருக்கும் அனுபவம் உள்ளது, எப்பொழு தெல்லாம் மனதின் சேவை அல்லது பேச்சு மூலம், கர்மத்தின் மூலம் சேவை செய்கின்றீர் களோ, அப்பொழுது அதனுடைய பலனாக ஆன்மிகக் குஷி கிடைக்கிறது. எனவே, சேவை மூலம் குஷியின் அனுபவம் எந்தளவு செய்திருக்கிறேன்? என்று சோதனை செய்யுங்கள். ஒரு வேளை, சேவை செய்தேன் ஆனால், குஷி ஏற்படவில்லை எனில், அந்த சேவை யதார்த்தமான சேவை அல்ல. சேவையில் ஏதாவது ஏதாவது குறைபாடு உள்ளது, ஆகையினால், குஷி கிடைக்கவில்லை. சேவையின் அர்த்தமே ஆத்மா தன்னை மகிழ்ச்சி யானவராக மலர்ந்திருக்கும் ஆன்மிக ரோஜாவாக, குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருப் பதாக அனுபவம் செய்வதே ஆகும். எனவே, சோதனை செய்யுங்கள் - முழு நாளும் சேவை செய்தேன் ஆனால், முழு நாளில் செய்யப்பட்ட சேவையோடு ஒப்பிடும்பொழுது அந்தளவு குஷி ஏற்பட்டதா அல்லது இதுவல்ல அது, இதுவல்ல அது . . . என்ற யோசனை, சிந்தனையே வந்து கொண்டிருந்ததா? மேலும், உங்களுடைய குஷியின் பிரபாவமானது ஒன்று சேவை ஸ்தானத்தில், இரண்டாவது சேவையில் துணையாக இருப்பவர்களிடத்தில், மூன்றாவது எந்த ஆத்மாக்களுக்கு சேவை செய்தீர்களோ, அந்த ஆத்மாக்களிடத்தில் ஏற்படும், வாயுமண்டலம் கூட மகிழ்ச்சியானதாக ஆகிவிடும். எனவே, சேவையின் பொக்கிஷம் குஷி ஆகும்.

நான்கு பாடங்களும் வந்துவிட்டன. அடுத்தது சம்பந்தம், தொடர்பு ஆகும், அதுவும் மிகவும் அவசியமானது, ஏன்? பாப்தாதாவிடமே சம்பந்தம் உள்ளது, பரிவாரத்தில் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, (இதிலென்ன தவறு உள்ளது) விதையுடனோ உள்ளது என்று சில குழந்தைகள் நினைக்கின்றனர். ஆனால், நீங்கள் விஷ்வத்தின் மீது இராஜ்யம் செய்ய வேண்டும் அல்லவா! இராஜ்யத்தில் சம்பந்தத்தில் வரத்தானே வேண்டும். ஆகையினால், சம்பந்தம் தொடர்பில் வந்து தான் ஆகவேண்டும், ஆனால், சம்பந்தம் தொடர்பில் ஆசீர்வாதங் கள் என்ற யதார்த்தமான பொக்கிஷம் கிடைக்கின்றது. சம்பந்தம் தொடர்பு இல்லாமல் உங்களிடம் ஆசீர்வாதங்கள் என்ற பொக்கிஷம் சேமிப்பாகாது. தாய் தந்தையின் ஆசீர்வாதங் களோ உள்ளன, ஆனால், சம்பந்தம் தொர்பிலும் கூட ஆசீர்வாதங்களைப் பெற வேண்டும். ஒருவேளை, ஆசீர்வாதங்கள் கிடைக்கவில்லை, ஃபீலிங் (உணர்வு) வரவில்லை என்றால்

சம்பந்தம் தொடர்பில் ஏதோ குறைபாடு உள்ளது என்று புரிந்துகொள்ளுங்கள். ஒருவேளை, சரியான முறையில் சம்பந்தம் தொடர்பு இருக்கிறது என்றால் ஆசீர்வாதங்களின் அனுபவம் ஏற்பட வேண்டும். மேலும், ஆசீர்வாதங்களின் அனுபவம் என்ன ஏற்படும்? நீங்கள் அனுபவிகள் தானே! ஒருவேளை, சேவையினால் ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன என்றால் ஆசீர்வாதங்கள் கிடைப்பதன் அனுபவமாக சம்பந்தத்தில் வரும்பொழுதும், காரியம் செய்யும் பொழுதும் டபுள் லைட்டாக (இலகுவாக) தனக்கு அனுபவம் ஆகும், சுமையின் உணர்வு ஏற்படாது. மேலும், யாருக்கு சேவை செய்தீர்களோ, யாருடைய சம்பந்தம் தொடர்பில் வந்தீர்களோ, அவர்களும் டபுள் லைட்டாக உணர்வார்கள். இந்த சம்பந்தத்தில் சதா இலகுவாக அதாவது ஈஸியாக இருப்பதாக, சுமை இல்லாதிருப்பதாக அனுபவம் செய்வார்கள். சம்பந்தத்தில் வருகிறேனோ, வரவில்லையோ.... ஆனால், ஆசீர்வாதங்கள் கிடைக்கும் காரணத்தினால் இருபக்கமும் நியம அனுசாரம், டபுள் லைட்டாக அனுபவம் ஏற்படும். அந்தளவு இலேசாகவும் இருக்கக் கூடாது - மிகுதியான இனிப்பிற்கு அதிகமான எறும்புகள் வருகின்றன என்று சொல்லப்படுவது போல் அந்தளவு இலேசாகவும் இருக்கக் கூடாது. எனவே, தன்னுடைய பொக்கிஷங்களை சோதனை செய்யுங்கள் என்று பாப்தாதா கூறுகின்றார்கள். சமயம் கொடுத்துக் கொண்டு இருக் கின்றார்கள். இப்பொழுது சமாப்தி என்ற பலகை போடப்படவில்லை. ஆகையினால், சோதனை செய்யுங்கள் மற்றும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள்.

பாப்தாதாவிற்கு குழந்தைகள் மீது அன்பு உள்ளது அல்லவா! எந்தவொரு குழந்தையும் பின்தங்கி விடக்கூடாது. ஒவ்வொரு குழந்தையும் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும் என்று பாப்தாதா நினைக்கின்றார்கள். போகப் போக தேக அபிமானம் வந்துவிடுகிறது. சுவமானம் மற்றும் தேக அபிமானம். சுவமானத்தின் குறைபாடே தேக அபிமானத்திற்கான காரணம் ஆகும். எனவே, தேக அபிமானத்தை அழிப்பதற்கான மிகவும் எளிய சாதனம் யாதெனில் - தேக அபிமானம் வருவதற்கு ஒரே ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை தான், அதை அறிந்தும் இருக்கின்றீர்கள். தேக அபிமானத்திற்கான ஒரு வார்த்தை என்ன? (நான்) நல்லது, எத்தனை முறை நான் நான் என்று கூறுகின்றீர்கள்? முழு நாளில் எத்தனை முறை நான் என்று சொல்கின்றீர்கள் என்பதை எப்பொழுதாவது கவனித்து இருக்கின்றீர்களா? நல்லது, ஒரு நாள் கவனிக்க (நோட் பண்ண) வேண்டும். அடிக்கடி நான் என்ற வார்த்தையோ வரத்தான் செய்கின்றது. ஆனால், நான் யார்? முதல் பாடம் நான் யார்? என்பதாகும். தேக அபிமானத்தில் நான் என்று கூறுகின்றீர்கள், ஆனால், உண்மையில் நான் யார்? ஆத்மாவா அல்லது தேகமா? ஆத்மா தேகத்தை தாரணை செய்துள்ளதா அல்லது தேகம் ஆத்மாவை தாரணை செய்துள்ளதா? எது தாரணை செய்துள்ளது? ஆத்மா தேகத்தை தாரணை செய்துள்ளது. சரி தானே? ஆத்மா தேகத்தை தாரணை செய்துள்ளது எனில் நான் யார்? ஆத்மா அல்லவா! எனவே, சகஜ சாதனம் யாதெனில் எப்பொழுதெல்லாம் நான் என்ற வார்த்தை சொல்கின்றீர் களோ, அப்பொழுதெல்லாம் நான் எப்பேற்பட்ட ஆத்மா? என்பதை நினைவு செய்யுங்கள். ஆத்மா நிராகாரமானது, தேகம் சாகாரமானது. நிராகார ஆத்மா சாகார தேகத்தை தாரணை செய்துள்ளது. எனவே, எத்தனை முறை நான் நான் என்ற வார்த்தை சொல்கின்றீர்களோ, அத்தனை தடவையும் நான் நிராகார ஆத்மா சாகாரத்தில் பிரவேசம் செய்துள்ளேன் என்று நினைவு செய்யுங்கள். எப்பொழுது நிராகார ஸ்திதி நினைவில் இருக்குமோ, அப்பொழுது நிரகங்காரியாக தானாகவே

ஆகிவிடுவீர்கள். தேக உணர்வு முடிவடைந்துவிடும். அதே முதல் பாடமான நான் யார்? என்பதை நினைவில் வைத்துக் கொண்டு, நான் எப்பேற்பட்ட ஆத்மா என்ற ஆத்மா வின் நினைவு வருவதனால் நிராகார ஸ்திதி உறுதியாகிவிடும். எங்கு நிராகாரி ஸ்திதி இருக்குமோ, அங்கு நிரகங்காரி, நிர்விகாரியாக அவசியம் ஆகிவிடுவார்கள். எனவே, எப்பொழுது நான் என்ற வார்த்தை கூறுகின்றீர்களோ, அப்பொழுது என்ன நினைவு வருகின்றது? என்பதை நாளை முதல் நோட் செய்ய வேண்டும். மேலும், எத்தனை முறை நான் என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றீர்களோ, அத்தனை முறை நிராகாரி, நிரகங்காரி, நிர் விகாரியாக தானாகவே ஆகிவிடுவீர்கள். நல்லது.

இன்று இளைஞர்களின் குழு வந்துள்ளது. இளைஞர்கள் நிறைய பேர் உள்ளனர். சதா செழிப்புடன் மகிழ்ச்சியாக இருங்கள் என்று பாப்தாதா இளைஞர் குழுவிற்கு வரதானம் கொடுக்கின்றார்கள். ஒரு பொக்கிஷத்தைக் கூட வீணாக்கக் கூடாது, செழிப்பாக இருக்க வேண்டும், செழிப்பாக்க வேண்டும், லௌகீக குரு நீடூழி வாழ்க என்று ஆசீர்வாதம் கொடுக் கின்றார்கள் ஆனால், சரீரத்திற்கு ஆயுள் எவ்வளவு உள்ளதோ, அவ்வளவே இருக்கும் என்று பாப்தாதா கூறுகின்றார்கள். ஆகையினால், சரீரத்தினுடைய ஆயுளின் கணக்குப்படி நீடூழி வாழ்க என்ற வரதானம் கொடுக்கவில்லை, ஆனால், இந்த பிராமண வாழ்வில் சதா நீடூழி வாழ்க என்று பாப்தாதா கூறுகின்றார்கள். ஏன்? பிராமணர்கள் தான் தேவதை ஆகுவார்கள். எனவே, நீண்ட ஆயுளோடு இருப்பீர்கள் அல்லவா! இளைஞர்களுக்கு ஒரு சிறப்புத்தன்மை உள்ளது. இளைஞர்களாகிய நீங்கள் தங்களுடைய சிறப்புத்தன்மையை அறிவீர்களா? என்ன விசேஷத்தன்மை உள்ளது? அறிவீர்களா? உங்களுக்குள் என்ன விசேஷத்தன்மை உள்ளது? (என்ன விரும்புகிறோமோ அதை செய்ய முடியும்) நல்லது - செய்ய முடியுமா? நல்ல விசயம், இளைஞர்கள் மிகவும் பிடிவாதம் செய்வார்கள், என்ன நினைக்கின்றார்களோ, அதை செய்வார்கள், காண்பிப்பார்கள் என்று உலகத்தின் கணக்குப்படி கூறுகின்றார்கள். அவர்கள் தவறாகக் கூறுகின்றார்கள், ஆனால், இங்கே பிராமண இளைஞர்கள் பிடிவாதக்காரரர்கள் அல்ல, ஆனால், தன்னுடைய உறுதிமொழியில் உறுதியாக இருப்பவர்கள். அதிலிருந்து விலகுபவர்கள் அல்ல. அப்படி இருக்கின்றீர்களா இளைஞர்களே? கை உயர்த்துவதோ மிகவும் சுலபமாகும். பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார்கள். கை உயர்த்துவது கூட தைரியம் தான் அல்லவா. ஆனால், தினமும் அமிர்தவேளையில், நான் இந்த பிராமண வாழ்வின் பிராப்தியிலிருந்து, சேவையிலிருந்து ஒருபொழுதும் எண்ணத்தளவில் கூட விலக மாட்டேன் என்று தந்தையிடம் செய்யப்பட்ட உறுதிமொழியை நினைவு கூறுங்கள். இந்த தைரியத்தை, உறுதிமொழியை தினந்தோறும் நினைவு கூறுங்கள், மேலும், தைரியம் என்ன வைத்திருக்கின்றீர்களோ, என்ன எண்ணம் செய்திருக்கிறீர்களோ, அதை நடைமுறையில் செய்து கொண்டிருக்கின்றேனா என்று அடிக்கடி சோதனை செய்யுங்கள்.

இரண்டு நான்கு இலட்சம் பேர் மாறிவிட்டாலும் கூட நல்லது தான் என்று அரசாங்கம் கூறுகிறது. பாப்தாதா கூறுகின்றார்கள் - இந்த பிராமண இளைஞர்களோ, ஒவ்வொருவரும் இலட்சத்திற்கு சமமானவர்கள். அவ்வளவு உறுதியானவர்கள். உறுதியானவர்களா? பாருங்கள், வீட்டிற்குச் சென்ற பிறகு மாயா வந்துவிட்டது, சமஸ்காரம் வந்துவிட்டது, பிரச்சனை வந்து விட்டது

என்று எழுதக் கூடாது. பிரச்சனைகளின் சமாதான சொரூபம் ஆகுங்கள். பிரச்சனை களோ வரும், ஆனால், நான் யார்? சமாதான சொரூபமா அல்லது பிரச்சனையில் தோல்வி அடைபவரா? என்று தன்னிடம் கேளுங்கள். உங்கள் அனைவருடைய பட்டம் என்ன - வெற்றி இரத்தினமா அல்லது தோல்வி அடையும் இரத்தினமா? வெற்றி இரத்தினம் ஆவீர்கள். பிராமண பிறப்பு எடுத்ததுமே பாப்தாதா ஒவ்வொரு பிராமணருடைய நெற்றியில் வெற்றிக்கான திலகத்தை அழிவற்றதாக வைத்துவிட்டார். எனவே, அமர் பவ என்ற வரதானத்தைப் பெற்றவர்கள் ஆவீர்கள். இப்பொழுது தனக்குத் தானே இந்த உறுதிமொழி செய்யுங்கள், பொதுவாக உறுதிமொழி செய்யச் சொன்னால் அனைவரும் செய்வார்கள், ஆனால், ஒரு பொழுதும் சமஸ்காரத்திற்கு வசமாக மாட்டேன் என்று தன்னுடைய மனதில் தனக்குத் தானே உறுதிமொழி செய்யுங்கள். தந்தையின் சமஸ்காரம் எதுவோ, அதுவே பிராமண ஆத்மாவாகிய என்னுடைய சமஸ்காரம் ஆகும். துவாபர, கலியுக சமஸ்காரம் எதுவோ, அது என்னுடைய சமஸ்காரம் அல்ல, ஏனெனில், அது தந்தையின் சமஸ்காரம் அல்ல. இந்த தமோகுணி சமஸ்காரம் பிராமணர்களின் சமஸ்காரமா? இல்லை அல்லவா! எனவே, நீங்கள் யார்? பிராமணர்கள் ஆவீர்கள் அல்லவா!

பாப்தாதாவிற்கும் கூட இளைஞர்கள் குழுவைப் பார்த்து பெருமிதமாக உள்ளது. பாருங் கள், தாதிகளும் கூட இளைஞர்களைப் பார்த்து பெருமிதம் கொள்கின்றார்கள். தாதிக்கு இளைஞர் கள் மீது அன்பு உள்ளது அல்லவா. அதிகப்படியான அன்பு உள்ளது. குமாரர் என்பவர் மென்மை யானவர் (சுகுகுமார்) ஆவார். குமாரர் அல்ல, சுகுகுமார் ஆவார். ஒவ்வொரு குமாரரும் உலகத்தின் குமாரர்களை மாற்றம் செய்து காட்டுபவர்கள். நல்லது. குமாரர்களுக்கு வேலை கொடுக் கட்டுமா? தைரியம் உள்ளதா? செய்தாக வேண்டும். குமாரிகள் செய்வீர்களா?

வேலை கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் கவனமாகக் கேட்க வேண்டும். அடுத்த சீசன் வரும்பொழுது, அடுத்த சீசனில் குமாரர்களுக்கான அப்பேற்பட்ட சிறப்பானதொரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்வோம், ஆனால் . . . ஆனால் என்பதும் வருகிறது. அதிகமாகக் கொடுக்கவில்லை, ஒரு ஒரு குமாரரும் 10-10 குமாரர்களுடைய, கையில் போடப்படும் சிறிய கங்கணத்தை தயார் செய்து அழைத்து வரவேண்டும். கையில் கங்கணம் போடுகிறார்கள் அல்லவா. எப்பொழுதும் பிரம்மா பாபாவின் கரங்களில் மலர்களின் கங்கணத்தை அணிவிக்கின்றார்கள். எனவே, ஒவ்வொரு குமாரரும் பக்குவமில்லாதவர்களை (கச்சா) அழைத்து வரக்கூடாது, பக்குவ மானவர்களை (பக்கா) அழைத்து வரவேண்டும். எனவே, மதுவனத்திற்கு வந்தார்கள், பிறகு, வீட்டிற்கு சென்றதும் மாறிவிட்டார்கள் என்பது கூடாது. அப்படி பக்குவப்பட்டவர்களை அழைத்து வரவேண்டும், பாப்தாதா அவர்களைப் பார்த்து பார்த்து ஆஹா! குமாரர் ஆஹா! என்று கூறவேண்டும். இதற்குத் தயாரா? இவ்வாறு செய்வீர்களா? கொஞ்சம் யோசனை செய்யுங்கள். வெறுமனே அம்மாதிரி கையை மட்டும் உயர்த்தாதீர்கள். செய்தாக வேண்டும். உருவாக்க வேண்டும். இரட்டை அயல்நாட்டினரும் செய்வீர்களா? இரட்டை அயல்நாட்டினரில் குமாரர்கள் கை உயர்த்துங்கள். நீங்களும் 10 பேரை அழைத்து வருவீர்கள் அல்லவா? அயல்நாட்டினரும் அழைத்து வருவீர்கள், இந்தியரும் அழைத்து வருவீர்கள். பிறகு, யார் முதல் தரமானவர்களை அழைத்து வருவார்களோ, அவர்களுக்கு

இனாம் கொடுப்பார்கள். சிறப்பான இனாம் கொடுப்பார்கள், தரமற்றதைக் கொடுக்கமாட்டார்கள். குமாரர்கள் மீது அன்பு உள்ளது அல்லவா. ஒருவேளை, அரசாங்கத்திற்கு நேர்மறையான செயல் செய்யக்கூடிய குமாரர்கள் அதிகத்திலும் அதிகமாகக் கிடைத்துவிட்டால் அரசாங்கம் எவ்வளவு மகிழ்ச்சி அடையும்! ஒருவேளை, நீங்கள் 10-10 குமாரர்களை அழைத்து வந்தீர்கள் என்றால் முழு ஹாலும் நிறைந்துவிடும், பிறகு, இந்த குமாரர்களைப் பாருங்கள் என்று அரசாங்கத்திற்கு அழைப்பு கொடுப்போம். ஆனால், அழைத்து வரவேண்டும், உருவாக்க வேண்டும். ஒருவேளை, தன்னுடைய ஸ்திதி, இலட்சியம், இலட்சணத்தை சமமாக வைத்திருந்தீர்கள் என்றால் சேவையில் வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்ற எண்ணம் கூட எழமுடியாது. நிச்சயிக்கப்பட்டுள்ளது. நீங்கள் நிமித்தமாக மட்டும் ஆக வேண்டும். இந்த உறுதி மொழியை சதா ரிவைஸ் மட்டும் செய்துகொண்டே இருங்கள். அதிசயம் செய்தே ஆகவேண்டும். நல்லது.

(முரளியின் நடுவில் திடீரென்று பாப்தாதாவிற்கு முன்பாக இரண்டு குமாரர்கள் மேடையில் வந்துவிட்டார்கள், அவர்கள் அகற்றப்பட்டார்கள்)

நல்லது. இப்பொழுது விளையாட்டில் விளையாட்டைப் பார்த்தீர்கள். சாட்சியாகி விளை யாட்டைப் பார்த்தீர்கள், என்ஜாய் (மகிழ்ச்சி) செய்தீர்கள், இப்பொழுது ஒரு நொடியில் முற்றிலும் தேகத்திலிருந்து விடுபட்டு சக்திசாலியான ஆத்ம ரூபத்தில் நிலைத்திருக்க முடிகிறதா? என்று இப்பொழுது பாப்தாதா கேட்கின்றார்கள். முற்றுப்புள்ளி.

(பாப்தாதா மிகவும் சக்திசாலியான டிரில் செய்வித்தார்கள்) நல்லது - இதே பயிற்சியை ஒவ்வொரு நேரமும் இடை இடையில் செய்ய வேண்டும். இச்சமயத்தில் காரியம் செய்ய வேண்டும், அடுத்த நொடிப்பொழுதில் காரியத்தில் இருந்து விடுபட்டு, சாகாரியிலிருந்து நிராகாரி ஸ்திதியில் நிலைத்து விடவேண்டும். இதுபோல் இந்தவொரு அனுபவத்தையும் பார்த்திருக்கிறீர்கள், ஏதாவது ஒரு பிரச்சனை வரும்பொழுது இதுபோல் ஒரு நொடியில் சாட்சி பார்வையாளராகி, பிரச்சனையை ஒரு சாலையோரக் காட்சி எனப் புரிந்து கொண்டு, புயலை ஒரு பரிசு எனப் புரிந்து கொண்டு, அதைக் கடந்து செல்லுங்கள். பயிற்சி உள்ளது அல்லவா? பின்வரும் நாட்களில் இம்மாதிரியான பயிற்சிக்கு மிகுந்த அவசியம் ஏற்படும். முற்றுப்புள்ளி. இது ஏன் நடந்தது, இது எப்படி நடந்தது? போன்ற கேள்விக்குறி கூடாது. நடந்துவிட்டது. முற்றுப்புள்ளி மற்றும் தன்னுடைய முழுமையான சக்திசாலி நிலையில் நிலைத்துவிடுங்கள். பிரச்சனைகள் கீழே தங்கிவிடும், நீங்கள் உயர்ந்த நிலையில் இருந்துகொண்டு பிரச்சனை என்ற சாலையோரக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து பொக்கிஷங்களில் நிறைந்த ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு நேரமும் பிராப்திகளினால் நிறைந்தவராக, புன்னகையுடன் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய ஆத்மாக்களுக்கு, சதா தந்தையிடம் செய்யப்பட்ட உறுதிமொழியை வாழ்க்கையில் பிரத்யட்சம் செய்யக்கூடிய ஞான சொரூப ஆத்மாக்கள், யோக சொரூப ஆத்மாக்களாகிய குழந்தைகளுக்கு, சதா இலட்சியம் மற்றும் இலட்சணத்தை சமமாக ஆக்கக் கூடிய, தந்தைக்கு சமமான ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு நேரமும்

அனைத்து பொக்கிஷங் களின் ஸ்டாக் (கையிருப்பு) வைக்கக்கூடிய மற்றும் ஸ்டாப் செய்யக்கூடிய தீவிர முயற்சியாளர்களான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், உள்ளத்தைக் கொள்ளை கொண்டவருடைய உள்ளத்தின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் : பிரச்சனைகளை ஆசிரியர் எனப் புரிந்துகொண்டு அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளக்கூடிய அனுபவி மூர்த்தி ஆகுக.

எந்தவொரு சூழ்நிலையிலும் பயப்படுவதற்கு பதிலாக கொஞ்ச நேரத்திற்கு அதை ஆசிரியர் எனப் புரிந்துகொள்ளுங்கள். பிரச்சனைகள் உங்களை விசேஷமாக இரண்டு சக்தி களினுடைய அனுபவி ஆக்குகின்றது, ஒன்று பொறுமை சக்தி மற்றும் இரண்டாவது எதிர் கொள்ளும் சக்தி. இந்த இரண்டு பாடங்களையும் கற்றுக்கொண்டீர்கள் என்றால் அனுபவி ஆகிவிடுவீர்கள். நானோ டிரஸ்டியாக இருக்கின்றேன், என்னுடையது எதுவும் இல்லை என்று எப்பொழுது கூறுகிறீர்களோ, பிறகு, பிரச்சனைகளினால் ஏன் பயப்படுகின்றீர்கள். டிரஸ்டி என்றால் அனைத்தும் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது, எனவே, எது நடக்குமோ அது நல்லதாகவே நடக்கும் என்ற இந்த நினைவினால் சதா கவலையற்றவராக, சக்தி சொரூபத்தில் இருங்கள்.

சுலோகன்: யாருடைய மனநிலை இனிமையானதாக இருக்கின்றதோ, அவர் மறந்தும் கூட யாருக்கும் துக்கம் கொடுக்க முடியாது.